05.03.2026

O.S.No.114/2022

DW1- மகேஷ்ராஜ்– த/பெ.கோபாலகிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. நான் இவ்வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றவர் என்றால் சரிதான்.

2. எனக்கு வழக்கு சொத்தை யார் கிரையம் கொடுத்தார் என்றால் 3ம் பிரதிவாதி வளர்மதி கிரையம் கொடுத்தார்.

3. வளர்மதியின் கணவர் 1ம் பிரதிவாதி செல்லப்பா என்றால் சரிதான்.

4. செல்லப்பா அவரது மனைவி வளர்மதிக்கு ஏற்பாட்டு ஆவணம் எழுதி வைத்து ஏற்பாட்டு ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு வளர்மதி கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான்.

5. 1,2 பிரதிவாதிகள் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்களின் தகப்பனார் பெயர் கிருஷ்ணன் நாடார் என்றால் சரிதான். கிருஷ்ணன் நாடார் தகப்பனார் பெயர் திரவிய நாடார் என்றால் சரிதான்.

6. திரவிய நாடார் உடன் பிறந்தவர்கள் நவமணி, பாக்கியம் மற்றும் ரத்தினம் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

7. வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி திரவியம் அவரது பாக சொத்தினை ரத்தினம் என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் கிழக்கு பக்கம் தங்கள் மனை என எல்கை மாலில் காட்டப்பட்டுள்ளது என்றும் மேல்பக்கம் நவமணி நாடார் இடம் என காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

8. நான் வளர்மதியிடம் எப்போது கிரையம் பெற்றேன் என்றால் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு கிரையம் பெற்றேன்.

9. என்னுடன் சேர்ந்து வளர்மதியிடம் 4, 6 முதல் 12 பிரதிவாதிகள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

10. நான் சொத்தை கிரையம் பெறும் போது வில்லங்க சான்றிதழை பார்வையிட்டு வாங்கப்பட்டதா என்றால் வில்லங்கத்தை பார்வையிட்டேன். அந்த வில்லங்க சான்றிதழ் எங்கு உள்ளது என்றால் என் கைவசம் உள்ளது.

11. நான் எந்த வகையான வில்லங்க சான்றிதழை பார்வையிட்டேன் என்றால் கணினிவழி வில்லங்க சான்றிதழை பதிவிறக்கம் செய்து பார்த்தேன். நான் பார்த்த வில்லங்கத்தில் 1975ம் வருடம் வாதியின் தந்தை பெற்ற கிரையம் துலங்கியதா என்றால் எனக்கு தெரியாது.

12. வாதியின் தகப்பனார் கிரையம் பெற்றதை தெரிந்து கொண்டே நான் வாதியிடம் சொத்தை அபகரிக்கவேண்டுமென்று கெட்ட எண்ணம் கொண்டு அதே சொத்தை மறு கிரையம் செய்தேன் என்றால் சரியல்ல.

13. 1,2 பிரதிவாதிகள் 2010ம் வருடம் பாக ஏற்படுத்தி அந்த பாகபத்திரத்தில் சீர்திருத்தம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

14. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் உரிமையில்லாத நபரிடம் நான் பெற்ற கிரையம் செல்லத்தக்கதல்ல என்றும் எனவே வாதியின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

15. வழக்கு சொத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது காலி மனையாக உள்ளது.

16. வழக்கு சொத்தில் என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை பட்டா பெற நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/-J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி